


தி.மு.க, அயலக அணி, குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி தலைமையில் நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்விற்கு அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் குடந்தை சி.தியாகராஜன், ஆயங்குடி ஜா.சையது முஸ்தபா, சேகரை வெ.செல்லத்துரை. துணைச் செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப்பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கீர், தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ.பொன்முடி, ஓட்டுனர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்கரியா, தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ.ஷாகுல் ஹமீது, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப்பேட்டை ம.நசுருதீன் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரஃபீக் வரவேற்றார்.

### குவைத்தில் – தி.மு.க. அயலக அணி சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 7ஆம் ஆண்டு நினைவேந்தல் கூட்டம்!

## குவைத் தி.மு.க. அயலக அணி பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது!

குவைத், ஆக. 10–

குவைத் நாட்டில் தி.மு.க., அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி மற்றும் செயலாளர் புதுக்கோட்டை எம்.எம்.அப்துல்லா (முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர்) ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, தி.மு.க, அயலக அணி, குவைத் பொறுப்பாளர் சிதம்பரம் ந.தியாகராஜன் ஒருங்கிணைப்பில், அமைப்பின் பொருளாளர் புதுவை அ.அறிவுமணி தலைமையில் நவீன தமிழகத்தின் சிற்பி தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறி ஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் ஏழாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு அமைப்பின் செயலாளர் புதூர் உத்தமனூர் ஜலீல் முஸ்தபா, இணைச் செயலாளர்கள் குடந்தை சி.தியாகராஜன், ஆயங்குடி ஜா.சையது முஸ்தபா, சேகரை வெ.செல்லத்துரை. துணைச் செயலாளர்கள் திருவாரூர் ச.குமார், முத்துப் பேட்டை ம.சபரிவாசன், விழுப்புரம் ஐ.ஜஹாங்கிர், தகவல் தொழில் நுட்ப அணி செயலாளர் மேட்டுவிளை ஐ.ஜானவாஸ், பொறியாளர் அணி செயலாளர் திருக்கோவிலூர் அ.பொன்முடி, ஓட்டுனர் நல அணி செயலாளர் திருச்சி ஏ.ஜே.எம்.இஷாக் ஜக்கரியா, தொழிலாளர் நல அணி செயலாளர் கூத்தாநல்லூர் ஏ.ஷாகுல் ஹமீது, விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் பரங்கிப்பேட்டை ம.நசுருதீன் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அமைப்பின் துணைப் பொருளாளர் திருவடத்தனூர் ஏ.எஸ்.முகமது ரஃபீக் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் அமைப்பின் இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் விழுப்புரம் எஸ்.அம்ஜாத் கான், குடந்தை த.மணிகண்டன், தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் ராமநாதபுரம் பைசான் அலி, தொண்டரணி செயலாளர் தானிப்பாடி சே.அஷ்ரப் அலி, தொண்டரணி துணைச் செயலாளர் உடையார்பாளையம் எஸ்.செந்தில்குமார், பொறியாளர் அணி துணைச் செயலாளர் மருதூர் ம.பிரேம்குமார், விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர்கள் ஆத்தூர் ஜான் பாஷா, கோட்டை பி. மோதிலால், ஓட்டுனர் நல அணி துணைச் செயலாளர்கள் திருவாரூர் திருவரங்கன், லட்சுமாங்குடி சசிகுமார், சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் குடந்தை ஆர்.முருகன், மகளிர் அணியை சேர்ந்த அரியலூர் சௌமியா பாஸ்கர், பொறியாளர் பாஸ்கர், இந்திய தூதரகப் பணியாளர் மற்றும் சமூக சேவகர் ஷாஜகான், குவைத் தளபதி பேரவை நிர்வாகிகள், அலி டிரான்ஸ்போர்ட் உரிமையாளர் கொடுந்துறை எஸ்.முகமது அலி , கூட்டணி கட்சிகளான வி.சி.க, ம.தி.மு.க., த.வா.க, த.மு.மு.க., நிர்வாகிகளும், தமிழ் அமைப்புகளான வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் நல சங்கம் & அறக்கட்டளை, கலகலப்பு நண்பர்கள் குழு, நந்தவனம், கூடல் நகர் தோழமைக் குழுமம் , உதவும் கரங்கள் லைப் ஸ்டைல் தமிழ் வலையொளி, மற்றும் சமூக நல அமைப்புகளின் பிரதிநிதிகளும் உறுப்பினர்களும் பொது மக்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பேசிய அனைவரும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் புகழினை போற்றினர். மேலும் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த திட்டங்களால் தமிழன் தலைநிமிர்ந்தான் என்றும், போராட்டமே வாழ்வெனக் கொண்டவர் இறுதிவரை போராடி வெற்றி கண்ட போராட்ட நாயகன் என்றும் போற்றி புகழ்ந்தனர். கலைஞரின் வழியில் இன்று கழகத் தலைவர் தளபதி அவர்கள் வெகு சிறப்பாக ஆட்சியை நடத்தி வருகிறார் என்றும், 2026 ஆம் ஆண்டு நடக்க இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் திமுக கூட்டணி வெற்றி பெற கலைஞர் அவர்களின் நினைவு நாளில் சூளுரைப்போம் என உறுதி ஏற்றனர்.

கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது இறுதியில் அமைப்பின் துணைச் செயலாளர் உளுந்தூர் பேட்டை மு.நஜீர் அகமது நன்றி கூறினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை ஆ. சந்திரன்

### ஆகஸ்ட் 11 (1996)



இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.

ஒன்றுபட்ட சென்னை மாவட்டத்தில் பகுதி பிரதிநிதியாகவும் – தென்சென்னை மாவட்டத்தில், வட்டக் கழகச் செயலாளர், மயிலை பகுதிக் கழகச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி சட்டமன்றத் தொகுதியை சார்ந்த 69 மீனவ கிராம மக்கள் பழவேற்காடு முகதுவாரத்தை சீரமைத்து வாழ்வாதாரத்தை மேம்படுத்த சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசரிடம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முன்னிலையில் மீனவ மக்கள் கோரிக்கை மனு மனு அளித்தனர் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ் மற்றும் மீனவர் சங்க நிர்வாகிகள் கிராம பொதுமக்கள் உள்ளனர்

### வாக்குப் பதிவின் நம்பகத்தன்மையை

# தேர்தல் ஆணையம் மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும்!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கம்!

சென்னை, ஆக. 11 –

வாக்குப் பதிவின் நம்பகத்தன்மையை தேர்தல் ஆணையம் மக்களிடம் தெளிவுபடுத்த வேண்டும் என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:

இந்திய நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி எழுப்பியுள்ள ‘வாக்கு திருட்டு’ என்ற குற்ற ச்சாட்டு, தற்போது நாடு முழுவதும் பெரும் புயலை கிளப்பி உள்ளது. கடந்த 2024ம் ஆண்டு நடந்த மக்களவை தேர்தல் முதல் பல்வேறு தேர்தல்களில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது. இந்திய தேர்தல் ஆணையமும், ஒன்றிய பாஜ அரசும் இணைந்து இதை செய்துள்ளது. போலி வாக்காளர்கள், போலி முகவரி, ஒரே முகவரியில் அதிக வாக்காளர்கள், தவறான புகைப்படங்கள், படிவம் 6ஐ தவறாக பயன்படுத்துதல் ஆகிய 5 வழிகளில் இந்த வாக்கு திருட்டு நடந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

“எங்களது கட்சிக்கு வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளில் தோல்விக்கான காரணம் குறித்து முழுமையாக ஆய்வு செய்தோம். இதில் போலி வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டதை அறிந்துள்ளோம். உதாரணமாக கர்நாடகாவின் மத்திய பெங்களூரு மக்களவை தொகுதியில் இந்த வகையில் 1 லட்சத்து 250 வாக்குகள் திருடப்பட்டுள்ளது. மகாதேவபுரா தொகுதியில் மட்டும் 11,965 போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். போலி மற்றும் தவறான முகவரிகள் மூலம் 40,009 வாக்காளர்கள் போலியாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மத்திய தொகுதியில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் முகவரி போலியாக உள்ளது. வீட்டு முகவரியின் கதவு எண் பூஜ்ஜியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது” என்பதையும் தெளிவாக கோடிட்டு காட்டியுள்ளார். வாக்குகளை யார் திருடுகிறார்கள் என்பது மக்களுக்கு தெரியும். முன்பு எங்களிடம் ஆதாரம் இல்லை. இப்போது 100 சதவீதம் ஆதாரம் இருக்கிறது. எனவே வழக்கம்போல் தேர்தல் ஆணையம் சாக்குப் போக்கு சொல்லக்கூடாது. அவர்கள் எங்களுக்கு சிசிடிவி காட்சிகள் மற்றும் மின்னணு வாக்காளர் பட்டியலை வழங்க வேண்டும்.

இது எனது கோரிக்கை மட்டுமல்ல. ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளின் கோரிக்கை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பீகார் சட்டப்பேரவைக்கு விரைவில் தேர்தல் நடக்கிறது. இதற்காக அம்மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் சமீபத்தில் முடிந்தது. கடந்த 1ம் தேதி வரைவு பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அதில் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டுள்ளதாக பெரும் சர்ச்சை எழுந்துள்ளது. இந்தச் சூழலில் ராகுல்காந்தி தெரிவித்துள்ள ‘வாக்கு திருட்டு’ என்பது அரசியல் கட்சிகள் மட்டுமன்றி, மக்கள் மன்றத்திலும் பெரும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் ‘‘ராகுல் காந்தி சொல்வது உண்மையென்றால், தேர்தல் விதி 1960(3) (ஆ) பிரிவின் படி பிரமாணப்பத்திரம் ஒன்றில் கையெழுத்திட்டு புகார் அளிக்க வேண்டும்’’ என்று தேர்தல் ஆணையம் அவருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இந்தியாவில் 2004ம் ஆண்டு பொதுத்தேர்தலில் முதல் முறையாக மின்னணு வாக்குப்பதிவு முறை அமலுக்கு வந்தது. அதிலிருந்து 20 ஆண்டுகளாக இந்த முறையில் தான் வாக்குப்பதிவு நடந்து வருகிறது. ஒவ்வொரு தேர்தலிலும் மின்னணு வாக்கு இயந்திரங்களின் நம்பகத்தன்மை குறித்து எதிர்க்கட்சிகளும், நடுநிலையாளர்களும் பல்வேறு கேள்விகளை முன்வைத்து வருகின்றனர்.


இதற்கு 100 சதவீதம் தெளிவான தீர்வு என்பது இதுவரை கிடைக்காத ஒன்றாகவே உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் தான் ‘வாக்கு திருட்டு’ என்ற குற்றச்சாட்டு இப்போது லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் ஹேஷ்டேக்காகி வருகிறது. எனவே வாக்குப்பதிவு குறித்த நம்பகத்தன்மையை மக்கள் பிரதிநிதிகளுக்கு மட்டுமன்றி, மக்கள் மன்றத்திற்கும் தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்த வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் மீதான மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் என்கின்றனர் நடுநிலையாளர்கள்.

இவ்வாறு ‘தினகரன்’ நாளேடு தலையங்கம் எழுதியுள்ளது.

## மாலைமணி பி.எஸ்.இளங்கோ

### 36-வது ஆண்டு நினைவு நாள்

11.8.1989



ஏங்கள் இதயத்தை விட்டு நீங்காது
என்றென்றும் எங்களது நினைவில் வாழ்ந்து வரும்

**இதய தெய்வத்திற்கு அஞ்சலி!**

மகன்: சித்தார்த் இளங்கோ
மகள்கள்: திருமதி. தமிழ்ச்செல்வி
திருமதி. மணிமேகலை
திருமதி. எழில் திரு. பழனியப்பா

மனைவி. சகுந்தலா இளங்கோ
மருமகன்கள்: திரு. பாண்டியன்
திரு. சுதாகர்
மருமகள்: தாட்சாயினி சித்தார்த்

பேரன்கள்: வருண்ராஜ், ஷருண்ராஜ், முகில், தர்ஷன், மௌரியன்
மற்றும் அலுவலக நண்பர்கள்